வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 28.02.2026 சனிக்கிழமை இதழ் : 54 பக்கங்கள் : 08

# சுரேஷ் சாலேயை அடுத்து கோட்டாபயவே இலக்கு!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, பெப் 28.

இலங்கை அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவைக் கைது செய்வதே இன்றைய அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும், புலம்பெயர் தமிழர்களைத் திருப் திப்படுத்தும் நோக்கிலேயே அரசாங்கம் இவ்வாறு நடந்து கொள்கிறது என்றும்

முன்னாள் அமைச்சரும், தேசிய சுதந்திர முன்னணி யின் தலைவருமான விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள் ளார்.

கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அரச புலனாய்வு சேவையின் தலைவர் சுரேஷ் சாலே என்ன செய்தார் என்ற தொனிப் பொருளில் தேசிய சுதந்திர முன்ன ணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற

07

## பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக யாழில் மக்களின் கருத்து திரட்டல்

### யாழ்.பல்கலை முன்பாக நேற்று நடந்தது

யாழ்ப்பாணம், பெப். 28

பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்ட வரைவுக்கு எதிராக மக்களின் கருத்தை திரட்டி நீதி அமைச்சுக்கு அனுப்பும் நடவடிக்கை யாழ்ப்பாணத் தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் முன்பாக நேற்று பொது அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்களின் பங்கேற்புடன் இந்த நட வடிக்கை இடம்பெற்றது.

07



## மேர்வின் சில்வா, பிரசன்ன ரணவீரவுக்கு எதிராக குற்றப்பத்திரம்

கொழும்பு, பெப். 28

முன்னாள் அமைச் சர்களான மேர்வின் சில்வா மற்றும் பிரசன்ன ரணவீர உள்ளிட்ட குழு வினருக்கு எதிராக கம் பஹா மேல் நீதிமன்றத் தினால் குற்றப் பத்திரிகை

07

## இந்தியா - இலங்கை உறவு மேலும் வலுவடைந்துள்ளது

### தூதுவர் சந்தோஷ் ஜா



கொழும்பு, பெப். 28

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு மேலும் வலு வடைந்துள்ளதாக இந்திய தூதுவர் சந் தோஷ் ஜா

07

## பயங்கரவாத சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும்!

### நீதியமைச்சுக்கு முன்பாக போராட்டம்


கொழும்பு, பெப். 28

பயங்கரவாதத்தடைச் சட்டம் முற்றாக நீக்கப் படுவதுடன் புதிதாக முன்மொழியப்பட்டிருக் கும் பயங்கரவாதத்திலி ருந்து அரசைப் பாதுகாக் கும் சட்ட வரைவு வாபஸ் பெறப்படவேண்டும் என வலியுறுத்தி நேற்று வெள்ளிக்கிழமை நீதிய மைச்சுக்கு முன்பாகக் கவனயீர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்ட சிவில் சமூக செயற்பாட்டா ளர்கள், தொழிற்சங்கவா திகள் மற்றும் மதத்தலை வர்கள் உள்ளிட்டோர், அதனை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் நூற்றுக்கணக்கானோ ரிடம் திரட்டப்பட்ட கையெழுத்துக்கள் அடங் கிய மகஜர் ஒன்றையும் நீதியமைச்சின் அதிகாரி யிடம் கையளித்தனர்.

தற்போது நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண் டின் 48 ஆம்

07

## கச்சதீவில் 6000 இலங்கை பக்தர்கள்!



யாழ்ப்பாணம், பெப். 28

கச்சதீவு புனித அந்தோ னியார் ஆலய திருவிழாவிற் காக நேற்று குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து 4439 பக்தர்களும், நெடுந்தீ விருந்து 450 பக்த்தர்களும், ஊர்காவற்றுறையிலிருந்து 434 பக்தர்களும் சென்றடை ந்த நிலையில், நேற்று இரவு குறிகாட்டுவான் மற்றும் காங்கேசன் துறையிலிருந்து

07

## கச்சதீவு செல்வதற்கு குறிகாட்டுவானில் குவிந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள்!

### படகுகள் இல்லாது வெயிலில் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், பெப். 28

கச்சதீவு புனித அந் தோணியார் ஆலயத் திரு விழாவில் கலந்து கொள் வதற்காக குறிகாட்டு வான் சென்றவர்கள் காலை 10.30 மணி முதல் படகுகள்

07



## முதலாவது சர்வதேச சைவ சித்தாந்த மாநாடு யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கை கள் பீட சைவ சித்தாந்த துறையும், உயர் பட்டப் படிப்புகள் பீடமும் இணைந்து நடத்தும்,

07




## டித்வா சூறாவளியினால் 173 பேர் இன்னும் மாயம்!

கொழும்பு, பெப். 28

இலங்கையைத் தாக்கிய டிட்வா சூறாவளியினால் நாட்டுக்கு பாதிப்புகள் ஏற்பட்டு இன்றுடன் மூன்று மாதங்கள் நிறைவடைகின்றன.

எனினும், காணாமல் போன 173 பேரை, இதுவரை யிலும் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளதாக அனர் த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் திகதி, இலங் கையின் தென் கடற்பரப்பில் உருவான குறைந்த அழுத்தம் நவம்பர் 27ஆம் திகதி சூறாவளியாக

07

## பிரிவினைவாதிகளை மகிழ்விக்கவே சுரேஷ் சாலேயை கைது செய்தது அரசு!

### சாடுகின்றது பொதுஜன பெரமுன

கொழும்பு, பெப். 28

பிரிவினைவாதிகளை மகிழ்ச்சிப்படுத்தவே சுரேஷ் சாலேயை அரசாங்கம் கைது செய்திருக்கிறது. இது யுத் தத்தை வெற்றி கொண்ட இராணுவத்தினரை புலனாய் வுத்துறையை காட்டிக்கொடுக்கும் நடவடிக்கையாகும் என பொதுஜன பெரமுன முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சம்பத் அத்துகோரல தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி காரியா லயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற


07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட அதிரடிப்படையினரை மோதிவிட்டு தப்பமுயன்ற உழவு இயந்திரங்கள் மீது சூடு!

**பரந்தன் - பூநகரி வீதியில் சம்பவம்**



கிளிநொச்சி, பெப். 28

கிளிநொச்சியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி சென்ற உழவு இயந்திரங்கள் மீது பொலிஸ் விசேட அதிரடி படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு சாரதி ஒருவரை கைது செய்துள்ளனர்.

மற்றுமொரு உழவு இயந்திரச் சாரதி , உழவு இயந்திரத்தை கைவிட்டு தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் உழவு இயந்திரத்தை மறிக்க முற்பட்ட பொலிஸ் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பரந்தன் - பூநகரி வீதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் நேற்று முன்தினம் இரவு பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஈடுபட்டிருந்த வேளை, வீதியில் மணலுடன் வந்த இரண்டு உழவு இயந்திரங்களை வழிமறித்துள்ளனர்.

அதன்போது உழவு இயந்திரம் ஒன்று பொலிஸ் விசேட அதிரடிப் படை வீரரை மோதி தள்ளிவிட்டு தப்பிச் செல்ல முற்பட்டவேளை அதன் மீது அதிரடிப் படையினர் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டனர்.

இதனை அடுத்து இரண்டு உழவு இயந்திரங்களையும் வீதியில் கைவிட்டு சாரதிகள் தப்பியோடியுள்ளனர். அவர்களில் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மடக்கிப் பிடித்த நிலையில் மற்றைய நபர் தப்பிச் சென்றுள்ளார்.

கைது செய்யப்பட்ட சாரதியையும், மீட்கப்பட்ட இரண்டு உழவு இயந்திரங்களையும், பொலிஸ் விசேட அதிரடி படையினர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸார், தப்பியோடிய மற்றைய சாரதியை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கடற்றொழிலாளர்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டம்!

**உயிரிழப்பின்போது ரூ.12 இலட்சம் இழப்பீடு**

கொழும்பு, பெப். 28

விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் இயங்கும் விவசாய மற்றும் விவசாய காப்பீட்டுச் சபையினால், கடற்றொழில் நடவடிக்கைகளுக்காக ஆழ்கடலில் மூழ்கிப் பணிபுரியும் கடற்றொழிலாளர்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக கடற்றொழிலாளர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்த விசேட திட்டம் நடைமுறைக்கு வருகிறது.

கடற்றொழில் சார்ந்த மூழ்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும்போது மரணம் சம்பவித்தால், காப்பீடு செய்தவருக்கு 12 இலட்சம் ரூபா இழப்பீடாக வழங்கப்படும்.

கடல் அல்லது நன்னீர் நிலைகளில் மூழ்கிப் பணியாற்றும் போது ஏற்படும் விபத்துக்களால் தற்காலிகமாகச் செயலிழப்பவர்கள் அல்லது அங்கவீனமடைபவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்கப்படும்.

ஒரு வருடத்திற்கான இந்த காப்பீட்டுப் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள கடற்றொழிலாளர் ஒருவர் வருடாந்தம் 1,920 ரூபா மாத்திரமே செலுத்த வேண்டும்.

பாதுகாப்புத் தேவையைப் பொறுத்து 12 இலட்சம் மற்றும் 15 இலட்சம் ரூபா வரையான காப்பீட்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (அ)

# தையிட்டியில் போராட்டம் வழக்கு திகதியிடப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 28

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக போராடியவர்கள் மீதான வழக்கு விசாரணைகள் ஏப்ரல் மற்றும் ஜூலை மாதங்களுக்கு திகதியிடப்பட்டுள்ளன.

தையிட்டி விகாரைக்கு எதிராக போராட்டம் நடத்தினார்கள் என குற்றம்சாட்டி, தவிசாளர்கள், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள் உள்ளிட்ட 11 பேருக்கு எதிராக பலாலி பொலிஸாரினால் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் தனித்தனியாக மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் குறித்த வழக்குகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது, குற்றம் சாட்டப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளவர்கள் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

விசாரணைகளை அடுத்து மூன்று வழக்குகளில் ஒரு வழக்கை ஏப்ரல் மாதத்திற்கும் மற்றைய இரு வழக்குகளையும் எதிர்வரும் ஜூலை மாதத்திற்கும் மன்று திகதியிட்டுள்ளது. (அ)

# பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் மீனவர் ஓய்வு மண்டபங்கள் திறப்பு

கிளிநொச்சி, பெப். 28

கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெட்டுக்காடு மற்றும் முழங்காவில் அன்புபுரம் ஆகிய பகுதிகளில் இரு மீனவர் ஓய்வு மண்டபங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மீனவர் ஓய்வு மண்டபங்கள் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் மாலை நடைபெற்றது.

விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் மீனவர் ஓய்வு மண்டபங்களைத் திறந்து வைத்தார்.

பூநகரி பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். (அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் உதவி

வடமராட்சி, பெப் 28

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தொண்டைமானாறு தெற்கு கிராம சேவையாளர் பிரிவு ஜே/383, கெருடாவில் வடக்கு கிராமசேவையாளர் பிரிவு ஜே/386, கெருடாவில் தெற்கு கிராமசேவையாளர் பிரிவு ஜே/385 ஆகிய பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவுப் பொருள்கள் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்டன.

ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் இவற்றை ஆச்சிரமத்தில் வைத்து வழங்கினார். மாதாந்தம் இந்த உதவித்திட்டம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-02)

# கிளினிக் சேவைகளிலிருந்து விலகும் அரச வைத்தியர்கள்

கொழும்பு, பெப். 28

விசேட மருத்துவ சேவையொன்றை நிறுவுதல் உள்ளிட்ட தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் முறையான பதிலை வழங்காத காரணத்தினால், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வைத்தியசாலைகளின் கிளினிக் நடவடிக்கைகளில் இருந்து விலக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள 50 கிளினிக் நிலையங்கள் மற்றும் நடமாடும் கிளினிக் அமைப்புகள் என்பன அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள் என அந்த சங்கத்தின் செயலாளர் பிரபாத் அத்தநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் ஆரம்ப சுகாதார சேவையை பராமரிக்க பணியாளர்கள் பற்றாக்குறை உள்ள சூழலில் இதுபோன்ற திட்டங்களுக்கு ஆதரவளிப்பதில்லை என்று வைத்தியர்கள் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# எரிவாயு தட்டுப்பாடு தொடர்கிறது

கொழும்பு, பெப். 28

நாட்டின் பல பகுதிகளில் தற்போதும் சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு உள்ளிட்ட பிரதான நகர்ப்பகுதிகளில் குறைந்த அளவிலேயே எரிவாயு விநியோகம் மேற்கொள்ளப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

3,700 மெற்றிக் தொன் எரிவாயு கப்பல் நாட்டுக்கு வந்துள்ளதாக லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை முதல் இவை விநியோகிக்கப்படுவதாக அந்த நிறுவனம் உறுதிப்படுத்தியது.

இதன்படி, இந்த மாதம் இறக்குமதி செய்யப்பட்ட மொத்த எரிவாயு அளவு 28,000 மெற்றிக் தொன்னை எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனம் தமது தினசரி சந்தை வெளியீட்டை 2,200 மெற்றிக் தொன்னிலிருந்து 2,700 மெற்றிக் தொன்னாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்த்தன தெரிவித்தார்.

எரிவாயு கையிருப்புகளை மறைத்து வைத்து, அதிக விலைக்கு விற்பனை செய்யும் விநியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நெல்லியடி பொலிஸாருக்கு எதிராக குடவத்தை பகுதி மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 28

வடமராட்சி நெல்லியடி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட குடவத்தை பகுதியில் மக்கள் மீது பொய்யான வழக்குகள் பதியப்படுவதக்கவும், பொலிஸார் மக்கள் மீது மூர்க்கத்தனமாக தாக்குதல் மேற்கொள்வதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயசந்திரச்மூர்த்தியிடம் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேரடியாக பாராளுமன்ற உறுப்பினர் குடவத்தை கிராமத்திற்கு சென்று மக்களுடன் உரையாடியதுடன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஊடாக நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.02.2026 சனிக்கிழமை

விசுவாவசு வருடம், மாசி 16

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## சுரேஷ் சாலேயின் கைதும் இனவாத அரசியல்வாதிகளின் கூச்சலும்

2019 ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக முன்னாள் அரச புலனாய்வு சேவையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தினால் (சி.ஐ.டி.) செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருகிறார். அவர் ஒரு சந்தேக நபராக விசாரணை செய்யப்படுகிறாரே தவிர,குற்றவாளி என்று எவரும் கூறவில்லை.

ஆனால், அவரின் கைது குறித்து எதிர்க்கட்சிகள் குறிப்பாக, அரசாங்கத்துக்கு எதிராக இனவாத அடிப்படையில் பயன்படுத்துவதற்கு ஏதாவது பிரச்னை கிடைக்காதா என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ மற்றும் சரத் வீரசேகர போன்ற அரசியல்வாதிகள் கடுமையான கண்டனங்களை தெரிவித்து வருகிறார்கள். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சட்டத்தரணியாக இருந்து பிறகு நீதியமைச்சர், நிதியமைச்சராக, வெளியுறவு அமைச்சராக பதவிகளை வகித்த அலி சப்ரியும் இந்த கண்டனக் குழுவில் இணைந்திருக்கிறார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவின் முக்கிய அதிகாரியாக இருந்த சுரேஷ் சாலே விடுதலை புலிகள் இயக்கத்தை போரில் தோற்கடிப்பதற்கு முக்கியமான பங்காற்றியவர் என்பதால் அவரது கைது நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்ப தற்காக உயிரைத் தியாகம் செய்து போராடிய இராணுவத்தை அவமதிப்பதாகவும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை தோற்றுவிப்பதாகவும் இந்த அரசியல் வாதிகள் கூறுகிறார்கள்.

அத்துடன் தரங்குறைந்த நிலக்கரி இறக்குமதி தொடர்பாக மூண்டிருக்கும் சர்ச்சை உட்பட பல்வேறு பிரச்னைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் சூழ்ச்சித்தனமான ஒரு நடவடிக்கையே சுரேஷ் சாலேயின் கைது என்றும் அவர்கள் குற்ஞ்சாட்டுகிறார்கள். அதேவேளை, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் சான்றுகளின் அடிப் படையிலேயே அவரைக் கைது செய்ததாக பொலிஸ் தரப்பில் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஒருவர் செய்தியாளர்கள் மாநாட்டில் கூறினார்.

சுரேஷ் சாலே குற்றவாளியா இல்லையா என்பதை நீதித்துறை தீர்மானிக்கும் என்பதால் சுயாதீனமான விசாரணைக்கு அனுமதிக்க வேண்டியது அவசியம் என்று கூறியிருக்கும் கத்தோலிக்க திருச்சபை, அவரின் கைதைப் பயன்படுத்தி எந்தவொரு கட்சியும் அரசியல் நாடகத்தை அரங்கேற்றக்கூடாது என்று கேட்டிருக்கிறது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக சந்தேகத்தில் முன்னைய அரசாங்கங்களில் முக்கிய பதவிகளில் இருந்த அரசியல்வாதிகளோ அல்லது முப்படைகளில் முக்கிய பதவிகளை வகித்தவர்களோ விசாரணைக்கு அழைக்கப்பட்டால் அல்லது கைது செய்யப்பட்டால் போரில் விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கு தங்களை அர்ப்பணித் தவர்கள் அவமதிக்கப்படுவதாகவும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சக்திகளின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்ப டுவதாகவும் கூச்சல் போடுவது இனவாத அரசியல் சக்திகளின் வழமையாக இருந்து வருகிறது.

போரில் ஈடுபட்ட படைவீரர்கள் சகலரும் "மாவீரர்களாக" (war Heroes) போற்றப்படுவது வேறு விடயம். ஆனால், அந்த மாவீரர்கள் தவறு எதையும் செய்ய மாட்டார்கள் என்று கற்பிதம் செய்வதும் குற்றச் செயல்கள் தொடர்பில் படைகளைச் சேர்ந்தவர்கள் சந்தேகத்தின் பேரில் என்றாலும் விசாரணைக்கு அழைக்கப்பட்டால் அல்லது கைது செய்யப்பட்டால் மாவீரர்களின் தியாகங்கள் அவமதிக்கப்படுகின்றன என்றும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வந்துவிட்டது என்றும் கூச்சல் போடுவதும் குற்றச்செயல்கள் அதிகரிப்பதை ஊக்கப்படுத்தக்கூடிய செயல் என்பதை இந்த இனவாத அரசியல்வாதிகள் சிந்திக்கத் தயாராயில்லை.

போரில் பல வருடங்கள் ஈடுபட்ட பிறகு பாதுகாப்புப் படைகளில் இருந்து ஓய்வு பெற்றதையடுத்து பாதாள உலகக் குழுக்களுக்காக "கூலிப்படைகளாக" கொலைக ளைச் செய்த முன்னாள் படைவீரர்கள் ( இனவாத அரசியல் சக்திகளின் வார்த்தைகளில் மாவீரர்கள்). பலர் கைது சம்பவங்கள் உண்டு. அதனால், ஒட்டு மொத்தமாக படைவீரர்களை "புனிதர்களாக்கும்" நச்சுத்தனமான சிந்தனை ஏற்கெனவே துப்பாக்கி கலாசாரத்தினால் தினமும் பல கொலைகள் இடம்பெற்று வருகின்ற நாட்டில் குற்றச் செயல்களை மேலும் ஊக்குவிக்கிறது.

சுரேஷ் சாலேயின் கைது தொடர்பில் சட்டம் அதன் கடமையைச் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும். சாலே மீதான விசாணைகளின் விளைவுகள் குறித்து அஞ்சக்கூடிய சக்திகள் கூச்சலிடும் இந்த அரசியல்வாதிகளின் பின்னணியில் இருக்கிறார்கள் என்ற சந்தேகம் இயல்பாகவே எழுகிறது.

## யாழில் சமுர்த்தி பயனாளிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்கும் திட்டம்

### மாவட்ட செயலகத்தில் முன்னாயத்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 28

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமானது அஸ்வெசும மற்றும் குறைந்த வருமானம் பெறும் சமுர்த்திப் பயனாளிகளை பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நோக்கில் தொழிற் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அந்த வகையில், இவ் வேலைத்திட்டத்தை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் மேலதிக அரசாங்க அதிபர் க. சிவகரன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் பொ. சிறீவர்ணன், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கற்கைகள் ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் விஜயசிங்க ஆகியோர் பங்குபற்றினர்.

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குறைந்த வருமானம் பெறும் மற்றும் அஸ்வெசும பயனாளிகளை பலப்படுத்தி, அவர்களது தொழிற்திறனை மேம்படுத்தி, சுயதொழில் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

இதன்போது குறித்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் நடைமுறைகள், வேலை வாய்ப்புகள், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கற்கைகள் ஆணைக்குழுவில் நிறுவனங்களை பதிவு செய்வதில் உள்ள பிரச்னைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (எ)

## தேசிய பாதுகாப்புடன் விளையாட வேண்டாம்

### பேராசிரியர் ரொஹான் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 28

மேஜர் ஜெனரல் (ஓய்வு) சுரேஷ் சாலேவின் கைது உள்நோக்கம் உடையது. அவரை கைது செய்து தேசிய பாதுகாப்புடன் விளையாட வேண்டாம் என்று பயங்கரவாத ஒழிப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் நிபுணரான பேராசிரியர் ரொஹான் குணரத்ன பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலேவின் கைது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மிகவும் மதிக்கப்படும் தேசிய பாதுகாப்பு நிபுணரான மேஜர் ஜெனரல் (ஓய்வு) சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டுள்ளார். தனது வாழ்நாள் முழுவதையும் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்காக அர்ப்பணித்த அவர் அரச புலனாய்வு சேவை மற்றும் இராணுவப் புலனாய்வுப் பணியகம் ஆகியவற்றின் தலைவராகப் பணியாற்றியவர். மூன்று தசாப்தங்களாக ஐந்து அரசாங்கங்களின் கீழ் தேசிய பிராந்திய மற்றும் உலகளாவிய பாதுகாப்புக்கு அவர் ஆற்றிய பங்களிப்பு சர்வதேச புலனாய்வு சமூகத்தால் மதிக்கப்படுவை. எவராலும் களங்கப்படுத்த முடியாத ஒரு தூய்மையான வரலாற்றை அவர் கொண்டுள்ளார் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். (எ)

### நள்ளிரவில் கைவரிசை:

## சி.சி.ரீவி மூலம் சிக்கிய 13, 14, 15 வயது சிறுமிகள்!

களுத்துறை, பெப். 28

களுத்துறை வெர்னன் பெர்னாண்டோ விளையாட்டு மைதானத்தின் சிற்றுண்டிச் சாலையை உடைத்து இனிப்பு மற்றும் சொக்லேட்களைத் திருடிய மூன்று சிறுமிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் 40,000 ரூபாயாகும் என களுத்துறை தெற்கு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களான சிறுமிகள் 13, 14 மற்றும் 15 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் தினேஷ் சில்வா தலைமையில், அப்பகுதியில் உள்ள சி.சி.ரீவி கமராக்களை பரிசோதித்த பின்னர் சிறுமிகள் அடையாளம் காணப்பட்டனர்.


அதனைத் தொடர்ந்து சிறுவர் இல்லத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இனிப்புகள், சொக்லேட், லொலிபொப், சூயிங்கம் மற்றும் பெப்பர்மிண்ட் தொகையொன்றை மீட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமிகள் சிறுவர் இல்லத்தின் சாவியைத் திருடி, அதிகாலை 01. 30 மணியளவில் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

பின்னர் சிற்றுண்டிச் சாலையின் முன் கண்ணாடியை பொல்லால் அடித்து உடைத்து, திருடிய பொருட்களைப் பொலித்தீன் பைகளில் போட்டுக்கொண்டு மீண்டும் சிறுவர் இல்லத்துக்குச் சென்று மறைத்து வைத்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் களுத்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புது நட்பு மலரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**மிதுனம்**
கணவன்ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பணிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களால் பிரச்சினைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். சிறப்பான நாள்.

**கன்னி**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். நன்றி மறந்த சொந்த பந்தங்களை நினைத்து வருத்தப்படுவீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**மகரம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**கும்பம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். நீண்ட நாட்களாக தள்ளிப்போன காரியங்கள் முடியும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள்.சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.


# வவுனியா- ஓமந்தையில் அதிகாலை இரண்டு லொறிகள் மோதி விபத்து!

### இருவர் மருத்துவமனையில் அனுமதி

வவுனியா, பெப். 28

வவுனியா- ஓமந்தை பகுதியில் இரண்டு லொறிகள் மோதி இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது. இதனால், ஏ- 9 வீதியின் போக்குவரத்தும் சுமார் 03 மணிநேரம் தடைப்பட்டதுடன் நீண்ட வரிசையில் வாகனங்கள் தரித்து நின்றன.



கடும் பனிமூட்டம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணையை வவுனியா- ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-10)

மக்களை ஒடுக்கும் பயங்கரவாத

# தடைச் சட்டமும் வேண்டாம் மாற்று சட்டமும் வேண்டாம்




யாழ்ப்பாணம், பெப். 28

மக்களை ஒடுக்கும் பயங்கரவாத தடைச் சட்டமும் வேண்டாம் மாற்றுச் சட்டமும் வேண்டாம் என்று வலியுறுத்தி வலிகாமம் பிரதேச சபைக்கு முன்னால் பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். கறுப்பு நிறத்திலான பதாகைகளை தாங்கியவாறு பிரதேச சபை உறுப்பினர்கள் அமர்வுக்கு செல்ல முன்னர் இந்த கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். பிரதேச சபை தவிசாளர் தி. நிரோஸ் தலைமையில் உறுப்பினர்கள் இந்த கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அரசாங்கத்துக்கு எதிரான பதாகைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தை மேற்கொண்டனர். (எ-03)

# பிரஜா சக்தி குழு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப். 28

வடமராட்சி கிழக்கு முள்ளியான் (ஜே-433) மற்றும் கேவில், போக்கறுப்பு(ஜே- 434) கிராம அலுவலர் பிரிவின் பிரஜா சக்தி குழுவின் முதலாவது கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முள்ளியான் கிராம அலுவலர் பிரிவின் பிரஜா சக்தி குழுவின் கலந்துரையாடல் காலை 10. 00 மணியளவில், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் கட்டைக்காட்டில் அமைந்துள்ள முள்ளியான் கிராம அலுவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது உள்ளக வீதி புனரமைப்பு, விவசாய ஊக்குவிப்புகள், மருத்துவமனை மேம்படுத்தல், மாணவர்களுக்கான கருத்தரங்குகள், பாடசாலைக்கான குடிநீர் வசதிகள், விளையாட்டு மைதானம், கல்வி, மின்சாரம் போன்ற இன்னும் பல அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (எ-08)

# விபத்தில் சிக்கிய மாணவன்

கிளிநொச்சி, பெப். 28

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் மாணவன் ஒருவர் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் குறித்த மாணவன் காயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு வீட்டுக்கு வந்து மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு கடைக்கு சென்றவேளையே இந்த விபத்து சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்த மாணவனுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை என்று கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸார் விசாரணைக ளின் பின்னர் தெரிவித்தனர். (எ-08)

# வீதியில் குப்பை கொட்டுவதை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை

### சி.சி. ரீவி கமராக்கள் மூலம் கண்காணிப்பு

வவுனியா, பெப். 28

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் வீதியில் குப்பை கொட்டுவதை அவதானித்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வீதிகளில் பல இடங்களில் சி. சி. ரீவி கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன என்று பிரதேச சபை தவிசாளர் பாலேந்திரன் தெரிவித்தார்.



சுற்றுச்சூழல் மாசு மற்றும் வீதியோர கழிவு அகற்றுவதில் ஏற்படுகின்ற பல்வேறு நெருக்கடிகளை கருத்தில் கொண்டு எமது பிரதேச சபைக்குட்பட்ட 57 இடங்களில் கண்காணிப்பு கமராக்கள் நேற்று முன்தினம் பூட்டப்பட்டன.

வீதியோரங்களில் குப்பை கொட்டுவோரை கண்டறிந்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நோக்கோடு குறித்த கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டதோடு, பல்வேறு சட்டவிரோத செயல்பாடுகளும் இதன் ஊடாக கண்காணிக்கப்படும் எனவும் பிரதேச சபை தவிசாளர் பாலேந்திரன் குறிப்பிட்டார். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவப்பு அறிவித்தல் இன்றி 14 சந்தேகநபர்கள் நாட்டுக்கு

**பொலிஸ் ஊடக பேச்சாளர் வுட்லர் தகவல்**

கொழும்பு, பெப். 28

சர்வதேச சிவப்பு அறிவித்தல்கள் இன்றி இதுவரை 14 சந்தேக நபர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் எவ். யு. வுட்லர் தெரிவித்தார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் போதைப்பொருள் கடத்தல்காரருமான பொடி லெசி என்ற ஜனித் மதுசங்க டி சில்வாவை நாட்டுக்கு அழைத்து வந்தமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில், சர்வதேச சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டிருந்த 29 சந்தேக நபர்களை நாட்டுக்கு அழைத்து வர முடிந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்காக இதுவரை 89 சிவப்பு அறிவித்தல்கள் பெறப்பட்டுள்ளன.

2026 ஆம் ஆண்டில் இவ்வாறான சந்தேக நபர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அதிகபட்ச முயற்சிகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச பொலிஸ் சிவப்பு அறிவித்தல் இன்றி, நேற்று அழைத்து வரப்பட்ட பொடி லெசி என்ற சந்தேக நபருடன் மொத்தம் 14 பேரை நாட்டுக்கு கொண்டு வர முடிந்துள்ளது.

சர்வதேச பொலிஸ் சிவப்பு அறிவித்தல் இல்லாத நிலையில், அந்தந்த நாடுகளின் குடிவரவு குடியகல்வு குற்றங்கள் மற்றும் நாடுகடத்தல் தொடர்பில் பொலிஸ் மா அதிபரின் நேரடி தலையீடு மற்றும் அந்த நாடுகள் அவர் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் இந்த சந்தேக நபர்களை எம்மால் அழைத்து வர முடிந்தது.

மேலும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்காக 89 சிவப்பு அறிவித்தல்கள் பெறப்பட்டுள்ளன. 2026 ஆம் ஆண்டில் இந்த சந்தேக நபர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்படும்- என்றார். (எ)

# வெளிநாட்டு சிகரெட்களுடன் இருவர் கைது!

கொழும்பு, பெப். 28

சட்டவிரோதமான முறையில், வெளிநாட்டு சிகரெட்களை நாட்டுக்குள் கொண்டு வந்து, கடத்திச்செல்ல முயன்ற இரண்டு இலங்கை பயணிகள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிகரெட்கள் சுமார் ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய் பெறுமதியானவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# உழவியந்திரத்தில் சிக்கி 15 வயது சிறுவன் பலி!

குருநாகல், பெப். 28

கல்கமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 39 ஆவது சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 15 வயது சிறுவன் ஒருவன் உழவியந்திரத்தில் சிக்கி உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றது.

குறித்த விபத்தில் மஹநான்னேரிய பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுவனே உயிரிழந்தார்.

பயணித்துக்கொண்டிருந்த உழவியந்திரத்தின் சாரதி ஆசனத்துக்கு அருகில் உள்ள பகுதியில் ஏறுவதற்கு அந்தச் சிறுவன் முயன்றார். இதன்போது, எதிர்பாராதவிதமாக அவர் உழவியந்திரத்திலிருந்து கீழே விழுந்தார்.

கீழே விழுந்த சிறுவன் மீது உழவியந்திரத்தின் சக்கரம் ஏறியதில் பலத்த காயமடைந்த நிலையில், உடனடியாக மீட்கப்பட்டு கல்கமுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து கல்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பல்கலை. மாணவர்களுக்கு புதிய புலமைப்பரிசில் திட்டம்

கொழும்பு, பெப். 28

லலித் அத்துலத்முதலி மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதியத்தின் அறங்காவலர் சபையால், ஒரு முறை மாத்திரம் வழங்கப்படும் விசேட புலமைப்பரிசில் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் இறுதியில் நாட்டை தாக்கிய “டித்வா” புயலால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பொருளாதார நிவாரணங்களை வழங்கும் நோக்கில் இந்த விசேட திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த விசேட புலமைப்பரிசில் திட்டத்துக்கான விண்ணப்பங்களை கோரும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை **www.mahapola.lk** என்ற மகாபொல இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# காலி குற்றப்புலனாய்வு பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்ட பொடி லெசி

கொழும்பு, பெப். 28

போதைப்பொருள் கடத்தல்காரரும், திட்டமிட்ட குற்றவாளியுமான பொடி லெசி பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் விமான நிலையத்தில் இருந்து காலி குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்ட பொடி லெசி என்ற ஜனித் மதுசங்க நேற்று அதிகாலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

மும்பையில் இருந்து நேற்று அதிகாலை 05. 56 மணிக்கு வந்த சிறீ லங்கன் விமான சேவைகளுக்கு சொந்தமான யுல்.எல் 142 என்ற விமானத்தில் அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்டிருந்தார்.

நீதிமன்றில் பிணை வழங்கப்பட்டதன் பின்னர் தலைமறைவாகியிருந்த பொடி லெசி, 2024 ஆம் ஆண்டு பிணையில் விடுவிக்கப்பட்டதும் இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்தார்.

இதனையடுத்து, அவர் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவின் மும்பையில் வைத்து கைது செய்யப்பட்டார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் இரண்டு அதிகாரிகள் இந்தியாவுக்கு சென்றதுடன், அவர் நேற்று அதிகாலை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டார்.

# மின்சார சபை ஊழியர்களின் பணிப்புறக்கணிப்புக்கு எதிர்ப்பு

கொழும்பு, பெப். 28

இலங்கை மின்சார சபையின் பல தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த அடையாள பணிப்புறக்கணிப்பை வன்மையாக கண்டிப்பதாக, சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறும் திட்டத்தை தெரிவு செய்த ஊழியர்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வலுசக்தி அமைச்சருக்கு அனுப்பி வைத்த கடிதமொன்றில், இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை சட்டவிரோதமானது என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தொழிற்சங்க தலைமைகளிடமிருந்து விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், 25 சதவீதத்துக்கும் குறைவான ஊழியர்களே இதில் கலந்துகொண்டதால் இந்த நடவடிக்கை தோல்வியடைந்துள்ளதாக அவர்கள் கூறினர். (எ)

# 882 கிலோ பீடி இலைகள் கடற்படையினரால் மீட்பு

புத்தளம், பெப். 28

கற்பிட்டியின் ஆனவாசல் மற்றும் முகத்துவாரம் ஆகிய பகுதிகளில் கடற்படையினர் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் மூலம், சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சுமார் 882 கிலோ கிராம் பீடி இலைகள் மற்றும் கப் ரக வாகனம் என்பன கைப்பற்றப்பட்டன. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைக்காடு கிராமத்துக்குள் யானைகள் பெரும் அட்டகாசம்

## பெண் ஒருவர் பலி! இருவர் காயம்



மட்டக்களப்பு, பெப். 28

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு கிராமத்துக்குள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை உட்புகுந்த காட்டு யானை ஒன்று பெரும் அட்டகாசம் புரிந்தது.

அதிகாலை வேளை புகுந்த காட்டு யானை தாக்கியதில் 75 வயது பெண்ணொருவர் உயிரிழந்ததுடன் மேலும் இரண்டு பெண்கள் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பெரு நிலப் பரப்பின் எல்லைக் கிராமங்களில் இதுவரைகாலமாக அட்டகாசம் புரிந்த காட்டு யானைகள் தற்போது மட்டக்களப்பு நகரப் பகுதி உள்ளிட்ட கரையோரப் பகுதிகளையும் அச்சுறுத்தி வருகின்றன.

எனவே, ஒட்டு மொத்தமாக மட்டக்களப்பு மாவட்டத்தை ஆட்டிப்படைக்கும் காட்டு யானைகளின் தொல்லைகளுக்கு முடிவு காணுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# தேற்றாத்தீவில் பாரிய விபத்து தெய்வாதீனமாக தப்பிய சாரதி



மட்டக்களப்பு, பெப். 28

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னால் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை பாரிய விபத்துச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

காத்தான்குடி பகுதியிலிருந்து மருதமுனை நோக்கிச் சென்று கொண்டிருந்த பட்டா ரக வாகனம், தேற்றாத்தீவு கொம்புச் சந்திப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னால் உள்ள மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

பட்டா ரக வாகனத்தை செலுத்திச் சென்ற சாரதி, எந்த வித ஆபத்துகளுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பினார். எனினும், குறித்த வாகனத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டதுடன், மின் கம்பமும் உடைந்து வீழ்ந்தது. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# மலையக ரயில் பாதையை அண்டிய வனப்பகுதியில் திடீரென தீப்பரவல்!

## கடந்த சில நாட்களில் தீ பரவல் அதிகரிப்பு



ஹற்றன், பெப். 28

மலையக ரயில் பாதையின் ஹற்றன் மற்றும் ரொசல்ல ரயில் நிலையங்களுக்கு இடையில், 106 மைல் கல்லுக்கு அருகிலுள்ள இலுக்கு வனப்பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

பிரதேசத்தில் நிலவும் கடும் வறண்ட வானிலையுடன், ரயில் பாதையை அண்டியுள்ள தேயிலை தோட்டங்களில் வசிக்கும் மக்கள் அந்த பாதையினூடாக பயணிக்கின்றனர். அவ்வாறு பயணித்த எவரேனும் இந்த வனப்பகுதிக்கு தீ வைத்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

மலையகத்தில் தொடரும் வறட்சியான காலநிலையால் காடுகளுக்கு தீ வைக்கும் விஷமச் செயல்கள் அதிகரித்துள்ளன.

இதேவேளை தலவாக்கலை , நானுஓயா, ஹற்றன் மற்றும் பொகவந்தலாவை பிரதேசங்களில் காட்டுத் தீ பரவல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இவ்வாறு கடந்த சில நாட்களில் ஏற்பட்ட தீ பரவலினால் பல ஏக்கர் காடுகள் எரிந்தன. தொடர்ந்து இவ்வாறு தீ வைக்கும் செயல் இடம்பெற்று வருவதால் நீரேந்தும் பகுதிகளில் நீர் வற்றி காணப்படுகின்றது. (எ)

# நாட்டில் சீரான வானிலை

கொழும்பு, பெப். 28

நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் சீரான வானிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேநேரம் தென் மாகாணத்திலும் இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதிகாலை வேளையில் நாட்டின் பல பகுதிகளில் பனி மூட்டமான நிலை காணப்படலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (எ)

# எத்திமலை வனப்பகுதியில் கஞ்சா சேனைகள் முற்றுகை

மொனராகலை, பெப். 28

எத்திமலை - கொட்டியாகலை வனப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, பாரிய கஞ்சா சேனைகள் கண்டறியப்பட்டன.

ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த 16, 544 கஞ்சா செடிகளை கொண்ட ஒரு பண்ணையும், 03 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த 38, 785 கஞ்சா செடிகளைக் கொண்ட மற்றுமொரு பண்ணையும் கண்டறியப்பட்டன. (எ)

# புதிய பயங்கரவாத சட்டம் குறித்து மட்டக்களப்பில் கலந்துரையாடல்

மட்டக்களப்பு, பெப். 28

புதிதாக முன்மொழியப்பட்டுள்ள அரசாங்கத்தைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்ட வரைவு தொடர்பில் ஊடகவியலாளர்கள், அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக செயல்பாட்டாளர்களை தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் புதன்கிழமை விழுது நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கல்லடியில் நடைபெற்றது. (எ)

# போதைப்பொருள் வியாபாரி பம்போ பொலிஸாரால் கைது

கல்முனை, பெப். 28

அம்பாறை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நீண்டகாலமாகப் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டு வந்த “பம்போ” எனும் போதைப் பொருள் வியாபாரி, பெருமளவு ஹெரோயினுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, தொட்டலங்க பகுதியில் இருந்து தனியார் பேருந்து மூலம் அம்பாறைக்கு ஹெரோயின் கடத்தி வரப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து, நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை குறித்த பேருந்தை வழிமறித்துச் சோதனையிட்ட போது, சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 2,677 மில்லிகிராம் ஹெரோயின் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இவர் மிகவும் தந்திரமான முறையில் பொலிஸாரை ஏமாற்றி நீண்டகாலமாக இந்தக் கடத்தல் தொழிலை முன்னெடுத்து வந்துள்ளார். இவரைப் பிடிக்கப் பொலிஸார் பலமுறை முயற்சித்த போதிலும், ஒவ்வொரு முறையும் அவர் தப்பித்து வந்துள்ளார். தற்போது சிக்கியுள்ள இவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-01)

# ஒரே பிரசவத்தில் பிறந்த மூன்று குழந்தைகள்!

கல்முனை, பெப். 28

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையில் ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறந்தன.

சம்மாந்துறை செந்நெல் கிராமத்தை சேர்ந்த இன்சாத் பானு என்பவரே கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையில் ஒரே தடவையில் மூன்று ஆண் குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார்.

இவ்வாறு, பிறந்த மூன்று ஆண் குழந்தைகளும் நலமாக உள்ளதுடன், தாயாரும் நல்ல உடல்நிலையுடன் இருப்பதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (எ)

# வீதியோர கடைகளில் விசேட பரிசோதனை

கல்முனை, பெப். 28

நோன்பு காலத்தை முன்னிட்டு உணவகங்கள் வீதியோர கடைகளில் விசேட பரிசோதனை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்களிடம் இருந்து தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகிலா இஸ்ஸதீனின் பணிப்புரைக்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் வழிகாட்டுதலின் கீழ் வீதியோர கடைகள், உணவகங்களில் விசேட சுகாதார பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (எ)

# தனியார் கல்வி செயல்பாட்டை நிறுத்தவும்

சம்மாந்துறை, பெப். 28

அம்பாறை- சம்மாந்துறை பிரதேச சபைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களின் கல்விச் செயல்பாடுகளை நான்கு வாரங்களுக்கு நிறுத்துமாறு சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் எம். மாஹிர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நடந்து முடிந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு ஓய்வை வழங்கும் நோக்கில், ஏப்ரல் முதலாம் திகதி வரை அவர்களுக்கான கற்றல் செயல்பாடுகளை தனியார் கல்வி நிலையங்களில் மேற்கொள்ள வேண்டாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த அறிவுறுத்தலை கடைப்பிடிக்காத தனியார் கல்வி நிலையங்களுக்கு எதிராக பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன- என்றார். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுரேஷ் சாலேயை...

ஊடகச் சந்திப்பில், உரையாற்றிய போதே விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

சுரேஷ் சாலே சஹ்ரானுடன் தொடர்பு வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்படுகிறது. ஆம், புலனாய்வுத்துறை அதிகாரிகள் சஹ்ரான்களுடன் மட்டுமல்ல பிரபாகரன் போன்றவர்களுடன் மட்டுமல்ல, பல்வேறு தரப்பினருடனும் தொடர்பு கொள்வது வழக்கம்.

சஹ்ரானின் தீவிரவாதச் செயல்பாடுகள் குறித்த தகவல்கள் கிடைத்த உடனேயே சஹ்ரானை கண்காணிக்கத் தொடங்கியது உளவுத்துறையே. தற்போது நடக்கின்ற செயற்பாடுகள் அனைத்தும் மிகப்பெரிய துரோகமாகும்.

2019 ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளைப் பாதுகாத்துக் கொண்டு, தமிழ் புலம்பெயர் சமூகத்தை திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் அரசாங்கம் செயற்படுகிறது" என்று குற்றஞ்சாட்டினார்.

மேலும், ஈஸ்டர் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரியான சஹ்ரான் ஹாஷிம் போன்ற தீவிர இஸ்லாமியர் ஒருவர், உறுதியான சிங்கள பௌத்தரான கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி ஆக்குவதற்காகத் தன் உயிரைத் தியாகம் செய்வாரா? என்னவொரு அபத்தம் இது?" எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (அ-ஒ)

## பயங்கரவாத...

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் மற்றும் பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டவரைவு தேவையில்லை என்பதை வலியுறுத்தி, அந்த கோரிக்கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் மக்களின் கருத்துக்கள் திரட்டப்பட்டு நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதில் பெருமளவான பொதுமக்களும் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டு தபால் அட்டைகளில் தமது கருத்துக்களை பதிவு செய்து வழங்கினர். (அ)

## பிரிவினைவாதிகளை...

செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளை கண்டுபிடித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறுகிய காலத்தில் நீதியை நிலைநாட்டுவதாக தெரிவித்து ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துக்கு அரசாங்கத்துக்கு 16 மாதங்கள் கடந்தும் அதனை செய்துகொள்ள முடியாமல் போனது. கடந்த ஏப்ரல் மாதம் பிரதான சூத்திரதாரியை வெளிப்படுத்துவதாகவே ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அதனை செய்துகொள்ள முடியாமல் போனதால், தற்போது இந்த ஏப்ரல் மாதமாகும்போது, இது தொடர்பில் ஏதனையாவது மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக தற்போது உளவுத் துறையின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலேயை கைது செய்திருக்கிறார்கள்.

சுரேஷ் சாலேயை கைது செய்துள்ளதன் மூலம் ஜனாதிபதி பிரிவினைவாதிகளையும், கத்தோலிக்க மக்களையும் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களையும் மகிழ்ச்சிப்படுத்தி இருக்கிறார். பிரிவினைவாதிகளை மகிழ்ச்சிப்படுத்தும் விடயத்தை ஜனாதிபதி தொடர்ந்து மேற்கொண்டுவருகிறார். யாழ்ப்பாணத்துக்கு சென்றும் அதனையே மேற்கொண்டிருந்தார்- என்றார். (அ)

## இந்தியா...

தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 77ஆவது குடியரசு தினம் மற்றும் இலங்கையின் 78ஆவது சுதந்திர தினம் ஆகியவற்றை முன்னிட்டு, இலங்கை - இந்தியச் சங்கம்" ஏற்பாடு செய்திருந்த விசேட கொண்டாட்டத்துடன் கூடிய இராப்போசன விருந்து, நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது, இலங்கை - இந்தியச் சங்கத்தின் உத்தியோகபூர்வ சஞ்சிகை வெளியீடு மற்றும் "போர்ட் ஒவ் கோல்" எனும் நூலினைப் பிரதமர் மற்றும் இந்திய தூதரிடம் கையளிக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதில் உரையாற்றிய பிரதமர்,

1949ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கை - இந்தியச் சங்கம், ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதில் பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றது.

கலாசார ரீதியான பங்களிப்பு, கலந்துரையாடல் மற்றும் தொடர்ச்சியான தொடர்புகள் ஊடாக, இரு நாட்டு அரசாங்கங்களுக்கு இடையில் மாத்திரமன்றி மக்களுக்கு இடையிலான உறவுகளைப் பேணுவதற்கும் இச்சங்கம் பெரும் பணியாற்றியிருக்கின்றது.

கடந்த ஆண்டில் இந்திய - இலங்கை இருதரப்பு உறவுகளின் வலிமையை நாம் மீண்டுமொருமுறை கண்டோம்.

டித்வா புயல் இலங்கையைப் பாதித்தபோது, "சாகர் பந்து" நடவடிக்கை மூலம் எமக்கு உதவிக்கரம் நீட்டிய முதலாவது நாடாக முன்வந்த இந்தியா, எமது மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு வழங்கிய ஒத்துழைப்பு அளப்பரியதாகும்.

இலங்கையின் மீட்சிப் பணிகளுக்காக 454 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான நீண்டகால நிவாரணப் பொதியை அறிவித்தமைக்காகவும், நிலைபேறான அபிவிருத்திப் பயணத்தில் எங்களுடன் கைகோர்த்துச் செயற்படுவதற்காகவும் இந்தியாவைப் பாராட்டுகின்றோம்.

இந்தியா எமது நெருங்கிய அண்டை நாடு மாத்திரமன்றி, ஒரு முக்கியமான பங்காளியும் ஆகும். இலங்கை மக்களின் நலன் கருதியும் பிராந்தியத்தின் மேன்மைக்காகவும் இந்த ஒத்துழைப்பை முன்னெடுத்துச் செல்ல இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது - என்றார்.

இதன்பின்னர் உரையாற்றிய இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா,

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவானது வெறும் இராஜதந்திர மட்டத்துடன் மட்டுப்படுத்தப்படாது, அதற்கு அப்பால் சென்ற ஒரு பலமான, அதேவேளை விசேடமான உறவாகும்.

இந்தியாவிற்கு வெளியே வழங்கப்படும் முதலாவது சர்வதேசப் பட்டப்படிப்பை இலங்கையில் அறிமுகப்படுத்தியதன் மூலம் கல்வித்துறையில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தகவல் தொடர்பாடல் மற்றும் மக்களிடையிலான உறவுகள் போன்ற பல துறைகளில் ஒத்துழைப்பு மேலும் வளர்ச்சியடைந்துள்ளது.

இந்திய - இலங்கை உறவுகளில் இன்றைய காலகட்டத்தில் ஒரு பாரிய முன்னேற்றம் காணப்படுகின்றது - எனக் குறிப்பிட்டார். (அ)

## கச்சதீவு...

இல்லாமல் பல மணிநேரம் வெயிலில் காத்திருந்த அவலநிலை ஏற்பட்டது.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நேற்று ஆரம்பமாகியது. இந்நிலையில் கச்சதீவு செல்வதற்காக குறிகாட்டுவான் இறங்குதுறையில் பல நூற்றுக்கணக்கானவர்கள் நேற்றுக் காலை முதல் குவிந்தனர்.

கச்சதீவுக்கான படகுச்சேவை குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து நேற்று காலை 5.00 மணி முதல் பி.ப 02.00 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று பிற்பகல் பி.ப 2.00 மணிக்கு பின்னர் கச்சதீவிற்கான கடற்போக்குவரத்து சேவை இடம்பெறமாட்டாது என்பதனால் யாத்திரிகர்கள் குறித்த நேரத்திற்கு முன்னர் தமது பயணத்தை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

இந்நிலையில் கச்சதீவு திருவிழாவில் கலந்து கொள்வதற்காக குறிகாட்டுவான் சென்றவர்கள் காலை 10.30 மணி முதல் படகுகள் இல்லாது வெயிலில் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. (அ)

## மேர்வின் சில்வா...

தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசுக்குச் சொந்த மான காணியொன்றை போலி உறுதிப் பத்தி ரங்களைத் தயாரித்து விற்பனை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள் ளது.

அதற்கமைய, தற் போது மேல் நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ள முன்னாள் அமைச்சர்கள் இருவர் உள்ளிட்ட பிரதிவாதி களுக்கு எதிராக இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான குற்றப்பத்திரிகைகள் வாசிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர்களைத் தவிர சரத் எதிரிசிங்க, அஜித் மில்ரோய், ஜயந்த கப்ரால் மற்றும் நவீன் வீரகோன் ஆகியோருக்கு எதிராகவும் குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, அனைத்து பிரதிவாதிகளையும் பிணையில் விடுவித்த கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்கை மீண்டும் மார்ச் மாதம் 27ஆம் திகதி வரை ஒத்திவைக்க உத்தரவிட்டார். (அ)

## முதலாவது...

முதலாவது சர்வதேச சைவ சித்தாந்த ஆய்வு மாநாடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடக் கூவர் கலையரங்கில் நேற்று ஆரம்பமானது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதியும், சிரேஷ்ட பேராசிரியருமான திருநாவுக்கரசு வேல்நம்பி தலைமையில் ஆரம்பமான நிகழ்வில், பிரதம விருந்தினராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் சி.சிறிசற்குணராஜா பங்கேற்றார்.

மங்கல விளக்கேற்றல், நந்திக் கொடியேற்றல் மற்றும் திருமுறைப் பாராயணத்துடன் ஆரம்பமான நிகழ்வில், சென்னைப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறைத் தலைவர், பேராசிரியர் நல்லூர் சா.சரவணன் நிகழ்நிலையில் பங்கேற்று, ஆதார சுருதி உரை ஆற்றினார்.

மாநாட்டின் முக்கிய அம்சமாக ஆய்வரங்க கட்டுரைக் கோவையை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறிசற்குணராஜா வெளியிட்டு வைக்க, சாதனைத் தமிழன் ஆறு. திருமுருகன் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து, சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.

சமகாலத்தில் சைவம் மற்றும் சைவ சித்தாந்தப் பணிகளில் தம்மை அதிகம் ஈடுபடுத்தி வரும் இளவல்களான கலாநிதி ஏரம்பமூர்த்தி அனுசாந்தன், அகில இலங்கை சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் வைத்திய கலாநிதி ப.நந்தகுமார், மருத்துவர் கி.பிரதாபன் ஆகியோர், விசேட விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (அ)

## டித்வா...

மாறியது.

அந்தச் சூறாவளிக்கு டித்வா எனப் பெயரிடப்பட்டது.

இந்த சூறாவளியினால் நாட்டின் 22 மாவட்டங்களுக்கு கடும் பாதிப்புகள் ஏற்பட்டதுடன், சுமார் 650 பேர் உயிரிழந்தனர்.

இதுவே, இலங்கை வரலாற்றில் இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்ட அதிகூடிய உயிரிழப்பாக பதிவாகியுள்ளது.

டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 150 குடும்பங்கள் இன்றும் 41 பாதுகாப்பு நிலையங்களில் தங்கியுள்ளன. வீடுகளை இழந்த மேலும் 43 ஆயிரத்து 831 குடும்பங்கள், வேறு இடங்களில் தங்கியுள்ளனர்.

டித்வா சூறாவளியினால் கட்டடங்கள், அவற்றிலுள்ள பொருட்கள், விவசாயம் மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்டுள்ள நேரடி சேதம் 4.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. (அ)

## பயங்கரவாத...

இலக்க பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் எனும் பெயரிலான புதிய வரைவை அரசாங்கம் முன்மொழிந்திருக்கிறது. அச்சட்ட வரைவு பற்றிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை அனுப்பிவைப்பதற்கு பொதுமக்களுக்கு நீதியமைச்சினால் வழங்கப்பட்டிருந்த இரண்டு மாத கால அவகாசம் நேற்றுடன் முடிவடைகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் இக்கருத்தறியும் காலப்பகுதி அறிவிக்கப்பட்டது முதல் பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும் எனவும், புதிதாக முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவை வாபஸ் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தி மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் இணைந்து நாடளாவிய ரீதியில் பல்வேறு கலந்துரையாடல்கள், விழிப்புணர்வூட்டல் கூட்டங்கள், எதிர்ப்புப்போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் ஓரங்கமாக சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து கொழும்பில் அமைந்துள்ள நீதியமைச்சுக்கு முன்பாக கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதி தொடர் கவனயீர்ப்புப்போராட்ட பிரசாரமொன்றை ஆரம்பித்திருந்தன. பொதுமக்களின் கருத்தறியும் காலப்பகுதி நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், அத்தொடர் கவனயீர்ப்புப்போராட்ட பிரசாரத்தின் இறுதிப்போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை மு.ப 11.00 - பி.ப 1.00 மணி வரை நீதியமைச்சுக்கு முன்பாக நடைபெற்றது.

இப்போராட்டத்தில் மனித உரிமைகள் ஆர்வலர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கப்பிரதிநிதிகள், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், மதத்தலைவர்கள் உள்ளடங்கலாகப் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

இப்போராட்டத்தின் நிறைவில் பயங்கரவாதத்தடைச்சட்டம் பதிலீடின்றி முற்றாக நீக்கப்படவேண்டும் என வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் நூற்றுக்கணக்கான பொதுமக்களிடம் திரட்டப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரை நீதியமைச்சர் அல்லது நீதியமைச்சின் செயலாளரிடம் கையளிப்பதற்கு இடமளிக்குமாறு நீதியமைச்சுக்கு முன்பாகக் குவிக்கப்பட்டிருந்த பொலிஸாரிடம் போராட்டக்காரர்கள் அனுமதி கோரினர்.

இருப்பினும் அதற்கு மறுப்புத் தெரிவித்த பொலிஸார், அம்மகஜரைத் தம்மிடம் கையளிக்குமாறு வலியுறுத்தினர். அதனை நிராகரித்த போராட்டக்காரர்கள், நீதியமைச்சர் இந்நாட்டு மக்களாலேயே தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும், தமது கோரிக்கையை உள்ளடக்கியிருக்கும் இந்த மகஜரை நீதியமைச்சர் அல்லது நீதியமைச்சின் அதிகாரி ஒருவரே வந்து பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தி, மீண்டும் கோஷங்களை எழுப்ப ஆரம்பித்தனர்.

அதனையடுத்து அப்போராட்டம் மேலும் சொற்ப நேரம் தொடர்ந்ததன் பின்னர், நீதியமைச்சின் அதிகாரியொருவர் வருகை தந்து போராட்டக்காரர்களிடமிருந்து மகஜரைப் பெற்றுக்கொண்டார். (அ)

## கச்சதீவில்...

மேலும் 500 பக்தர்கள் சென்றடைந்தனர்.

நீர்கொழும்பு மற்றும் மன்னார் உட்பட ஏனைய மாவட்டங்களிலிருந்து நேரடியாகவும் பக்தர்கள் சென்றடைந்துள்ளனர்.

குறிகாட்டுவான் வந்தடைந்த 4439 பக்தர்களும் கடற்படை மற்றும் தனியார் படகுகள் மூலம் கச்சதீவை சென்றடைந்தனர்.

இம் முறை 6000க்கும் மேற்பட்ட இலங்கை பக்தர்கள் அங்கு சென்றதுடன் இந்தியாவிலிருந்து 3992 பக்த்தர்கள் சென்றடைந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## வெளிநாடுகளுக்கு தப்பிச்சென்ற 26 பாதாளக் குழு உறுப்பினர்கள்!

### விசாரணைகளை துரிதப்படுத்த உத்தரவு

கொழும்பு, பெப். 28

நாட்டில் இருந்து 26 பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் வேறு நாடுகளுக்கு தப்பிச்சென்றுள்ளமை தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான விசாரணைகளை நிறைவு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் அசங்க எஸ். போதரகம குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கடத்தல் மற்றும் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவுறுத்தியுள்ளார்

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் அளிக்கப்பட்ட முறைப்பாடை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பல கைரேகைப் பதிவுகள் விசாரணையின் ஒரு பகுதியாக இணைத்துக்கொள்ளப் படவுள்ளன. இதன்படி, அவை கைரேகைப் பதிவு அலுவலகத் துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இதுவரை இரண்டு அறிக்கைகள் மாத்திரமே பெறப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர். (அ)

## டித்வாவினால் பாதிக்கப்பட்ட பல்கலை மாணவர்களுக்கு புதிய புலமைப்பரிசில்!

கொழும்பு, பெப். 28

லலித் அத்துலத்முதலி மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதியத்தின் அறங்காவலர் சபையினால், ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் விசேட புலமைப்பரிசில் திட்டமொன்றை நடைமுறைப் படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் இறுதியில் நாட்டைத் தாக்கிய "டித்வா" புயலினால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பொருளாதார நிவாரணங்களை வழங்கும் நோக்கில் இந்த விசேட திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த விசேட புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்களைக் கோரும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை றறற.அயாயிழடய.டம என்ற மகாபொல இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

**டித்வா புயல் தாக்கம்**

## 4,700 பேர் தொடர்ந்தும் பாதுகாப்பு முகாம்களில்!



கொழும்பு, பெப். 28

டித்வா பேரழிவினால் ஏற்பட்ட பாதிப்பை இலங்கை தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறது.

கடுமையான வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளைத் தொடர்ந்து சுமார் 4,700 பேர் இன்னும் தற்காலிக பாதுகாப்பு மையங்களில் வசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ள.

சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு (ஐ.ஓ.எம்) மற்றும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மற்றும் செம்பிறை சங்கங்களின் கூட்டமைப்பு இணைந்து நடத்திய ஆராய்ச்சியின் அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பதுளை, கேகாலை, நுவரெலியா, கொழும்பு, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய ஆறு மாவட்டங்களில் உள்ள 45 செயலில் உள்ள பாதுகாப்பு மையங்களில் 1,332 குடும்பங்களைச் சேர்ந்த 4,729 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

டித்வா புயல் 25 மாவட்டங்களையும் பாதித்தது, இதனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாடசாலைகள், கோயில்கள், சமூக அரங்குகள் மற்றும் பிற பொது கட்டிடங்களில் தங்குமிடம் தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பல தற்காலிக தங்குமிடங்கள் மூடப்பட்டிருந்தாலும், மதிப்பிடப்பட்ட 80 இடங்களில் 45 மையங்கள் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்த மக்கள்தொகையில் பெண்கள் 27 சதவீதமும், ஆண்கள் 25 சதவீதமும், 18 வயதுக் குட்பட்ட குழந்தைகள் 26 சதவீதமும், முதியவர்கள் 14 சதவீதமும் உள்ளனர்.

திறந்தவெளி இடங்களில் 64 சதவீதத்தில் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் அடையாளம் காணப்பட்டனர், இதனால் அவர்கள் மிகவும் பொதுவாகப் பாதிக்கப்படக்கூடிய குழுவாகக் கருதப்பட்டனர்.

53 வீத இடங்களில் நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள் பதிவாகியுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள்தொகையில் ஒரு சதவீதத்தினர் மாற்றுத்திறனாளிகள் என்றாலும், பாதிக்கும் மேற்பட்டமையங்கள் குறைந்தது ஒரு மாற்றுத்திறனாளியையாவது கையாளுகின்றது.

இருப்பினும், 60 வீத தளங்கள் அவர்களுக்கு முழுமையாக அணுகக்கூடியதாக இல்லை. இந்த அறிக்கை பல பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு கவலைகளை எடுத்துக்காட்டுகிறது.

சுமார் 35 வீத மையங்களில் வன்முறை அல்லது துன்புறுத்தலைத் தடுக்க பாதுகாப்பு ரோந்துகள் அல்லது தங்குவதற்கான முறையான விதிகள் போன்ற குறிப்பிட்ட நடவடிக்கைகள் இல்லை.

தாய்ப்பால் கொடுப்பதற்கான பிரத்யேக இடங்கள் 27 வீத இடங்களில் மட்டுமே உள்ளன. சுகாதார வசதிகளும் நெருக்கடியில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## க.பொ.த. உயர்தர செயல்முறை பரீட்சைக்கான திகதி அறிவிப்பு

கொழும்பு, பெப். 28

2025 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பான செயல்முறை பரீட்சைகளுக்கான திகதிகளை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, பொறியியல் தொழில்நுட்பத்திற்கான செயல்முறை பரீட்சைகள் மார்ச் ஆறாம் திகதி முதல் மார்ச் 15ஆம் திகதி வரை நடைபெறும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது .

கூடுதலாக, அழகியல் பாடங்களுக்கான செயல்முறை பரீட்சைகள் மார்ச் 9ஆம் திகதி முதல் மார்ச் 16ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாடசாலை விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி அட்டைகள் அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மேலும், தனியார் விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி அட்டைகள் அவர்களின் விண்ணப்பங்களில் வழங்கப்பட்டுள்ள முகவரிகளுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# அறிவுசார் வெளியேற்றத்தால் இலங்கைக்கு பெரும் நெருக்கடி!

### பேராதனை பல்கலைக்கழகத்தின் ஆய்வில் திடுக்கிடும் தகவல்கள்

கொழும்பு, பெப். 28

இலங்கையிலிருந்து பட்டதாரிகளின் வெளியேறும் அறிவுசார் வெளியேற்றம் பாரிய நெருக்கடியாக உருவெடுத்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புதிய ஆய்வு ஒன்று எச்சரித்துள்ளது.

அரச பல்கலைக்கழக பட்டதாரிகளில் 50 வீதத்திற்கும் அதிகமானோர் நாட்டை விட்டு நிரந்தரமாக வெளியேறுவதாக அந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

மருத்துவம், பொறியியல் மற்றும் விவசாயம் போன்ற முக்கியமான துறைகளில் வெளியேற்ற வீதம் 80 வீதம் முதல் 90 வீதம் வரை உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

ஆண்டுதோறும் சுமார் 42,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் பயில்கின்றனர் (கலை - 25வீதம், முகாமைத்துவம் - 20வீதம், பொறியியல் - 13வீதம், மருத்துவம் - 10வீதம்).

குறிப்பாக அறிவியல் சார்ந்த துறைகளில் பட்டம் பெற்ற மிகச் சிறந்த மாணவர்கள் பெருமளவில் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்.

மேலும், பல்கலைக்கழகக் கல்விக்காக அரசாங்கம் ஆண்டுதோறும் 87 பில்லியன் ரூபாய்களை செலவிடுகிறது.

இலங்கையின் 24.5 வீத மக்கள் வறுமையில் வாடும் நிலையில், எமது நாட்டின் வரிப்பணத்தில் உருவான மருத்துவர்களும் பொறியியலாளர்களும் மேற்கத்தேய நாடுகளின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்கின்றனர்.

இது இலங்கையின் இலவச கல்வியை செல்வந்த நாடுகளுக்கான ஒரு "அபிவிருத்தி உதவித் திட்டமாக" மாற்றியுள்ளது" என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

பொருளாதார மற்றும் சமூக யதார்த்தங்களே இந்த நிலைக்குக் காரணம் என ஆய்வு கூறுகிறது.

உலகளாவிய சந்தையுடன் ஒப்பிடும்போது அரச மற்றும் தனியார் துறைகளில் வழங்கப்படும் சம்பளம் மிகக் குறைவாக உள்ளது. திறமையானவர்களுக்கு தகுந்த வாய்ப்புகளை வழங்க முடியாமல் நாடு ஒரு பொருளாதாரப் பொறிக்குள் சிக்கியுள்ளதாக வும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெளியேற்றத்தால் இலங்கையின் சுகாதார மற்றும் கல்வித் துறைகள் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால், பணியில் எஞ்சியிருக்கும் ஏனைய தொழில் வல்லுநர்களுக்கு வேலைப்பழு அதிகரித்துள்ளது.

இது நாட்டின் சேவை வழங்கல் கட்டமைப்புகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என அந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை வரி கட்டமைப்பில் விரைவில் பாரிய மாற்றங்கள்

### சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின் நடைமுறைக்கு

கொழும்பு, பெப். 28

இலங்கையின் வரி கட்டமைப்பில் பாரிய மாற்றங்களைக் கொண்டுவரும் நோக்கில், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலத்தை அரசாங்கம் சமர்ப்பித்துள்ளது.

நிதியமைச்சர் அநுரகுமார திஸாநாயக்கவினால் கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி இதற்கான விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது.

பாராளுமன்றத்தில் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னரே இவை நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, காணி, கட்டடங்கள் அல்லது பங்குகளை விற்பனை செய்யும்போது கிடைக்கும் இலாபத்திற்காக செலுத்தப்படும் வரி அதிகரிக்கப்படவுள்ளது.

அறக்கட்டளைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தற்போதுள்ள 10 வீத வரி வீதம் பாரிய அளவில் 30 வீதமாக உயர்த்தப்படவுள்ளது.

நிலுவை வரிகளுக்கான ஒருமுறை மாத்திரம் வழங்கப்படும் நிவாரணம் வரி செலுத்துவதில் தாமதம் அல்லது நிலுவை வைத்துள்ளவர்களுக்கு ஒரு விசேட சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

2023 மார்ச் 31 ஆம் திகதி வரை திரட்டப்பட்ட வட்டித் தொகையை முழுமையாகத் தள்ளுபடி செய்ய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

புதிய சட்டம் நடைமுறைக்கு வந்து 6 மாத காலப் பகுதிக்குள், அசல் வரித் தொகை மற்றும் அபராதங்களை முழுமையாகச் செலுத்தவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org